# குறுகத் தறித்த குறளாய்...

தமிழன் வீட்டுச் சமையலறையில் குறுகத் தறித்த குறள் போல அஞ்சறைப் பெட்டியில் பூத்திருக்கும் குறுமைப் பொருள் மிளகு – மிளகு என்றவுடன் அதன் காரத்தன்மை நாவிலிருந்து காது வரை நீள்கிறது. இனிப்புப் பொருள்களுக்கு இச்சை கொள்ளும் குழந்தைகள் கார்ப்புப் பொருள்களைக் கண்டு காத தூரம் ஓடுகின்றனர். மிளகினை உண்ண வேண்டிக் கண்ணன் என்னும் சிறுவனை ஆற்றுப்படுத்தும் தாயின் குரல் கதைப்பாடல் வடிவிலே ஒலிக்கின்றது. இக்கதைப் பாடல் மிளகினை உண்ணாத சிறார்களுக்கு மட்டும் அல்ல பெரியோர்களுக்கும் ஒரு படிப்பினையை அன்போடு புகட்டுகின்றது.

குறுகத் தறித்த குறள் போல் எண்ணற்ற மருத்துவப் பயன் விளைக்கும் மிளகினை இலக்கிய உணவாய் உண்போம். 'கதைப்பாடல்' மின் – நூலாய் ஆக்கம் பெற வழிகோலிய கல்லூரி நிர்வாகத்தாருக்கு இதயம் கனிந்த நன்றி.

மாணவர்களை ஊக்கப்படுத்தும் கல்லூரி மேனாள் தாளாளர் மதிப்புமிகு **வை. அய்யன் கோடீஸ்வரன்** அவர்களுக்கும், மாணவர் முன்னேற்றத்திற்கு ஊக்கப்படுத்திடும் கல்லூரி தாளாளர் மேன்மைமிகு **கி. அபிரூபன்** அவர்களுக்கும் கந்தகத்திணையின் இதயம் கனிந்த நன்றி.

புதுமைப் படைப்பு நோக்கிப் பயணம் செய்ய அனுமதி வழங்கிய கல்லூரியின் மேனாள் முதல்வர் முனைவர் **வ. பாண்டியராஜன்** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் **செ. அசோக்** அவர்களுக்கும் களிப்பு நிறை நன்றி!. துறையின் ஆக்கப்பணி கண்டு ஊக்கம் விதைக்கும் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **க. சிவனேசன்** அவர்களுக்குக் கந்தகத்திணை நன்றியினை மொழிகின்றது.

மாணவக் குழந்தைக் கவிஞரை மீட்டெடுத்த பெருமிதத்தில் அமெரிக்காவில் தமிழ் இதயத்தோடு வாழ்ந்து வரும் **உலகத்தமிழ்க் கல்விக்கழகத்தின் தலைவர் மற்றும் செயலர் திரு. இரா. வெங்கடேஷ்,** B.E., (PLM Leader in FORD, America) அவர்களுக்குக் கந்தகத் திணை நன்றி கலந்த வணக்கத்தினை உரித்தாக்குகின்றது. தன் வரைகலையால் ( Graphic ) பாடல்களுக்கு படம்வழி உயிரூட்டிய மாணவர் ம. பழனிக்குமார் (III MCA) அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றி. பாப்பா பாக்கள் மழலைகளின் நாவில் மலரட்டும்! தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் பன்னாட்டு உறவை இணைக்கட்டும்!

முனைவர் **ந. அருள்மொழி,**
**தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்,**
ஒருங்கிணைப்பாளர், **கந்தகத்திணை.**